# ***ETERNAL GRACE CHURCH CHAIN PRAYER GUIDE FOR CORONA VIRUS***

- ***சங்கீதம் 46ஐ சத்தமாக வாசிக்கவும்.***
- ***தேவனின் மகத்துவத்தை குறித்த ஒரு பாடலை பாடி தேவனை துதிக்கவும்.***
- ***பரிசுத்த ஆவியானவரை வரவேற்கவும்.***

***ஜெபக்குறிப்புகள்***

**1) கொரோனா வைரஸ் அழிந்து, அது பரவுவதை கர்த்தர் தடை செய்து தேசங்களுக்கு ஷேமம் கொடுக்கும்படி நம்மை தாழ்த்தி நம் பாவங்களை அறிக்கையிடுவோம். ஆண்டவராகிய இயேசுவின் இரத்தம் நம் பாவங்களை மன்னிக்கும்படியாக ஜெபிப்போம்.**

***2 நாளாகமம் 7:13-15 - 13. நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள்ளே கொள்ளைநோயை அனுப்பும்போது, 14. என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன். 15. இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்.***

***1 யோவான் 1:9 - நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.***

நினிவே பட்டணம் கவிழ்கப்பட்டு போகுமென்று யோனா தீர்க்கதரிசி சொன்ன போது, அந்த பட்டணத்து ராஜா முதல் மனுஷர் யாவரும், மிருகங்கள் உள்பட தங்களை தாழ்த்தி உபவாசித்தார்கள். அவர்கள் தங்கள் வழிகளை கர்த்தருக்கு முன்பு சீர்படுத்தியபடியால், தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்.
நம்மை தாழ்த்தி, மனம் திரும்பி, நம் பாவங்களை அறிக்கையிட்டு முழு இதயத்தோடும் கர்த்தரை தேடும் போது, அவர் தாம் செய்யும் தீங்கைக்குறித்து மனஸ்தாபப்படுகிறவராய் இருக்கிறார்.
கொள்ளை நோயின் நாட்கள் மாறி, கர்த்தரிடத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படி நம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு நிவிர்த்தியாகும்படி நம்மை

ஒப்புகொடுத்து ஜெபிப்போம்.

*அப்போஸ் 3:19-20 - 19. ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்,*
*20. உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்.*

**2) ETERNAL GRACE CHURCH மற்றும் அனைத்து சபைகளும் சுத்திகரிக்கப்படும்படியாகவும், பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டு அதனிமித்தம் சபைகளிலும், தேசங்களிலும் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்**

*தீத்து 2:14 - அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.*

கர்த்தர் நம்மை சுத்திகரிக்கும்படி ஒப்புகொடுப்போம். நாம் சுத்திகரிக்கப்படும் போது, நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ள ஜனமாக மாற்றப்படுவோம். அதற்காகவே இயேசு நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். நம்முடைய சுத்திகரிப்பும், பக்திவைராக்கியமும் மறுரூப வாழ்க்கைக்கு நேராக நம்மை நடத்தும்.
ETERNAL GRACE CHURCH மற்றும் அனைத்து சபைகளிலும் ஒரு பின்மாரி ஊற்றப்படும்படியாக ஜெபிப்போம், சபைமக்களுடைய வாழ்க்கை மறுரூபமடையும்படியாக ஜெபிப்போம். சபைகளில் எழுப்புதல் உண்டாகும்படியாக ஜெபிப்போம். சபைகளில் எழுப்புதல் உண்டாகும் போது பல அதிசயங்களும் அற்புதங்களும் நடக்கும். அதை காணும்படியாக தேசத்து ஜனங்கள் சபைகளை தேடி வருவார்கள். அப்பொழுது தேசங்களிலும் எழுப்புதல் பரவும். இதற்காக ஜெபிப்போம்.

*ரோமர் 12:2 - நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.*

*யோவேல் 2:28-29 - 28. அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.*

*29. ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்.*

3) ETERNAL GRACE சபைக்காக ஜெபிப்போம்

**A) சபை மக்கள் இரட்சிப்பில் நிலைத்திருக்கவும், அநேகர் சபைக்கு வந்து இரட்சிக்கப்படும்படியாக ஜெபிப்போம்**

*அப்போஸ் 2:47 - தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.*

**B) சபை மக்கள் அனைவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு. சபை மூலம் எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்**

*அப்போஸ் 4:31 - அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்.*

**C) சபை மக்கள் அனைவரும் ஜெபிக்கிறவர்களாக இருக்கும்படி ஜெபிப்போம்**

*அப்போஸ் 12:5 - அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்.*

**D) சபை மக்கள் அனைவரும் நன்றாக வேதம் வாசிக்கும்படி ஜெபிப்போம்**

*அப்போஸ் 17:11 - அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்.*

**E) சபையில் ஒருமனம் இருக்கும்படியாக ஜெபிப்போம்**

*அப்போஸ் 4:32 - விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது.*

**F) சபை மக்கள் சுவிசேஷத்தை சொல்லுகிறவர்களாய் இருக்கும்படி ஜெபிப்போம்**

*அப்போஸ் 8:4 - சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்.*

**G) சபைக்கு புதிய ஆத்துமாக்கள் வரும்படி ஜெபிப்போம். சபை பக்திவிருத்தி அடைந்து, விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு வளர்ந்து பெருகும்படி ஜெபிப்போம்.**

*அப்போஸ் 9:31 - அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின.*

**4) ETERNAL GRACE சபை போதகருக்காக ஜெபிப்போம்**

சபை போதகருக்கு சபை நடத்த வேண்டிய ஞானத்தையும், அபிஷேகத்தையும், வரங்களையும் கர்த்தர் தரும்படி ஜெபிப்போம். தம் திட்டங்களை நிறைவேற்றும்படி தேவன் அவரை வல்லமையாய் பயன்படுத்தும்படி ஜெபிப்போம்.
போதகர் மேலும், அவர் குடும்பத்தின் மேலும் தேவ ஆசிர்வாதமும், தேவ பாதுகாப்பும் இருக்கும்படியாக இருக்கவும், அவர்களுடைய ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம். அவர்கள் கையின் பிரயாசத்தில் தேவ ஆசீர்வாதம் இருக்கவும், அவர்கள் தேவைகள் சந்திக்கபடவும் ஜெபிப்போம். போதகருடைய இரு மகன்களுக்கும் கர்த்தருக்கு சித்தமான வாழ்க்கை துணை அமையவும், அவர்கள் வாழ்க்கையில் தேவபாதுகாப்பும், தேவஆசீர்வாதமும் இருக்க ஜெபிப்போம். இரட்சிக்கப்படாத வீட்டார் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

*எபேசியர் 6:18 - எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.*

**5) ETERNAL GRACE சபை மக்களுக்காக ஜெபிப்போம்**

சபை மக்கள் மேலும், அவர்கள் குடும்பங்கள் மேலும், அவர்கள் வேலைகள் மேலும் தேவனுடைய பாதுகாப்பு இருக்கவும், அவர்களுடைய எல்லா தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம். அவர்கள் கையின் பிரயாசத்தில் தேவ ஆசீர்வாதம் இருக்கவும், சமாதானத்தோடும், ஆரோக்கியத்தோடும் இருக்கவும் ஜெபிப்போம். தேவ திட்டம் அவர்கள் வாழ்க்கையில் நிறைவேறும்படி ஜெபிப்போம். அவர்கள் பிள்ளைகள் மேல் தேவபாதுகாப்பும் தேவஆசீர்வாதம் இருக்கவும், பிள்ளைகளின் படிப்பிலும் / வேலையிலும் தெய்வீக ஞானம் விளங்கும்படி ஜெபிப்போம்.

சுகமில்லாதவர்களுக்கு சுகமும் , வேலையில்லாதவர்களுக்கு வேலையும், SALARY கிடைக்காதவர்களுக்கு SALARY, VISA இல்லாதவர்களுக்கு VISA கிடைக்க ஜெபிப்போம். இரட்சிக்கப்படாத வீட்டார் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

*எஸ்ரா 8:21 - அப்பொழுது நாங்கள் எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களைத் தாழ்த்துகிறதற்கும், எங்களுக்காகவும் எங்கள் பிள்ளைகளுக்காகவும் எங்கள் சகல பொருள்களுக்காகவும் செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும், நான் அங்கே அந்த அகாவா நதியண்டையிலே உபவாசத்தைக் கூறினேன்.*

**6) உலகெங்கிலுமுள்ள ஊழியக்காரர்களுக்காகவும், சபைகளுக்காகவும் ஜெபிப்போம்**

உலகெங்கிலுமுள்ள ஊழியக்காரர்களுக்கு ஜெபிப்போம். இந்த நெருக்கடி நாட்களில் கர்த்தர் தம்முடைய வெளிப்பாடுகளை கொடுத்து, தம்முடைய திட்டங்களை நிறைவேற்ற அவர்களை அக்கினி ஜுவாலைகளாக எடுத்து பயன்படுத்த ஜெபிப்போம். அவர்கள் உறுதியோடும், உற்சாகத்தோடும் ஊழியம் செய்ய ஜெபிப்போம். அவர்கள் ஆரோக்கியத்தோடு இருக்கவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்கள் மேலும், அவர்கள் குடும்பங்கள் மேலும் தேவபாதுகாப்பு இருக்க ஜெபிப்போம்.

*1 கொரிந்தி 15:58 - ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.*

உலகெங்கிலுமுள்ள தேவ ஜனங்களுக்காக ஜெபிப்போம். அவர்கள் மேலும், அவர்கள் குடும்பங்கள் மேலும் தேவனுடைய பாதுகாப்பு இருக்கவும், அவர்களுடைய எல்லா தேவைகள் சந்திக்கபடவும் ஜெபிப்போம். எந்த குறைவும் இல்லாமல் சமாதானத்தோடும், ஆரோக்கியத்தோடும் இருக்க ஜெபிப்போம்.

*சங்கீ 34:10 - சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.*

**7) கொரானாவிலிருந்து மக்களும், தேசங்களும் பாதுகாக்கப்படும்படியாகவும், கொரோனா நோய் உடையவர்கள் அதிலிருந்து சீக்கிரம் குணமாகி விடுதலையாகும்படியாகவும் விசுவாசத்தோடு ஜெபிப்போம்**

*யாக்கோபு 5:15 - விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.*

கொரோனா வல்லமையினால் மனிதர் அழிந்து போகாதபடி, கர்த்தருக்கு முன் நாம் திறப்பின் வாசலில் நிற்போம். தேசங்களின் பாவங்கள் மன்னிக்கப்படும்படியாகவும்,. கர்த்தருடைய கிருபை, இரக்கம், பாதுகாப்பு தேசங்களின் மேலும், தேசத்து மக்கள் மேலும் இருக்கும்படியாக ஜெபிப்போம். கட்டுண்டவர்களின் பெருமூச்சையும் திக்கற்றவர்களுடைய கூக்குரலையும் அவர் நிராகரிக்க மாட்டார். தேசங்களில் கொரோனாவின் வல்லமை அழிந்து போகும்படி ஜெபிப்போம்.
இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான சிகிச்சையும் பராமரிப்பும் கிடைத்து, பூரண சுகமும் ஆரோக்கியமும் கிடைக்க ஜெபிப்போம்.
<u>விசேஷமாக இந்தியா, UAE, USA மக்களுக்காக ஜெபிப்போம்.</u>

*சங்கீ 107:19-20 - 19. தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்; அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சிக்கிறார்.*
*20. <u>அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.</u>*

*சங்கீ 91:9-10 - 9. எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய். 10. ஆகையால் <u>பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.</u>*

**<u>8) இந்த நோய் வரும் அபாயம் இருப்பவர்களுக்கு *(வயதானவர்கள், பெலவீனமானவர்கள், சர்க்கரை வியாதி, இருதய நோய் போன்ற CHRONIC DISEASES இருப்பவர்கள், நோய் வாய்பட்டவர்களை பராமரிக்கும் குடும்பத்தினர்..)* ஜெபிக்கவும்.</u>**
**<u>முன்னணியில் இருப்பவர்களுக்காக ஜெபிக்கவும். *(மருத்துவர்கள், நர்சுகள், பராமரிக்கிறவர்கள், சுகாதார ஊழியர்கள், அதிகாரிகள், volunteers)*</u>**
**<u>இந்த நோயிலிருந்து இப்படிப்பட்டவர்கள் பாதுகாக்கப்படும்படியாக ஜெபிக்கவும்</u>**

*1 பேதுரு 5:7 - அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், <u>உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.</u>*

நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத மனிதர்களுண்டு. சரீரத்தில் பலவீனமானவர்கள், வயதானவர்கள், ஏற்கனவே பல வியாதிகளை உடையவர்கள், கொரோனோவால் பாதிக்கப்பட்டவர்களை பராமரிக்கிறவர்கள்.......இப்படிப்பட்டவர்களை தேவன் பாதுகாக்கும்படியாகவும், கொரோனா இவர்களை தாக்காதபடிக்கும் ஜெபிப்போம்.

தங்கள் உயிரையும் பணயம் வைத்து, முன்னணியிலிருந்து வேலை செய்யும் ஒவ்வொருவருக்காகவும் ஜெபிப்போம். அவர்கள் பாதுகாப்பிற்கு தேவையான PERSONAL PROTECTIVE EQUIPMENT அவர்களுக்க கிடைக்கட்டும். நம்முடைய ஜெபம்

கொரோனோவின் வல்லமையிலிருந்து அவர்களை பாதுகாக்கட்டும். அவர்கள் சோர்ந்து போகாதபடி நல்ல மன உறுதியோடும், ஆரோக்கியத்தோடு இருந்து தங்கள் வேலைகளை செய்யும்படி ஜெபிப்போம்.
விசேஷமாக இந்தியா, UAE, USA மக்களுக்காக ஜெபிப்போம்.

*2 கொரிந்தி 1:10-11 - 10. அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம். 11. அநேகர்மூலமாய் எங்களுக்கு உண்டான தயவுக்காக அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்.*

**9) நாட்டின் தலைவர்களுக்காகவும், அவர்கள் தேசமக்களின் நலனை மனதில் கொண்டு சரியான தீர்மானங்கள் எடுக்கவும் ஜெபிக்கவும்**

*நீதி 21:1 - ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப்போலிருக்கிறது; அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்.*

தேவன் தேசத்து தலைவர்களின் இதயங்களை தன் சித்தத்தின்படி திருப்பி, அவர்கள் தங்கள் தேசங்களுக்கு சரியான திட்டங்களை அமல்படுத்தி, மக்களுக்கு நல்ல காரியங்களை செய்யும்படி ஜெபிப்போம். சாலமோனுக்கு கிடைத்த ஞானம் இவர்களுக்கு கிடைக்கட்டும்.
விசேஷமாக இந்தியா, UAE, USA தலைவர்களுக்காக ஜெபிப்போம்.

**10) கொரொனோவிற்கு மருந்துகளும், VACCINEகளும் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு தேவன் ஞானம் கொடுக்க ஜெபிப்போம்.**

*தானியேல் 2:21-22 - 21. அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ...........ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். 22. அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளிலிருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்.*

இந்த வியாதிக்கான மருந்தை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் நிபுணர்களுக்கு கர்த்தர் ஞானத்தை கொடுக்கவும், விரைவில் மருந்துகளும் / VACCINEகளும் கண்டுபிடிக்கப்பட்டு அது மக்களுக்கு சுலபமாக கிடைக்க ஜெபிப்போம்.

**11) பொருளாதார வீழ்ச்சியிலிருந்தும், பஞ்சங்களிலிருந்தும் தேசங்களும், தேசத்து மக்களும் பாதுகாக்கப்படும்படியாய் ஜெபிப்போம். தொழில் செய்கிறவர்கள் மற்றும் மக்களின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்படும்படியாக ஜெபிப்போம்.**

தேவன் விவசாயங்களையும், சிறு தொழில்களையும், பெரும் வணிகங்களையும் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிப்போம். வியாபாரங்கள் நலிந்து போகாமலும் வர்த்தகங்கள் குறைவுபடாமலும் இருக்க ஜெபிப்போம். கொரோனாவினால் தேசங்களின் பொருளாதாரங்கள் பாதிப்புக்குள்ளாகாதபடி ஜெபிப்போம். மக்கள் வறுமையிலிருந்தும், பஞ்சத்திலிருந்தும் பாதுகாக்கப்படும்படியாக ஜெபிப்போம். தேசங்களின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக விசுவாசத்தோடு ஜெபிப்போம். விசேஷமாக இந்தியா, UAE, USAக்காக ஜெபிப்போம்.

***யோவேல் 2:21 - தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.***

**12) இந்த சூழ்நிலையில் மனிதர் இயேசு கிறிஸ்துவை அறிந்து, அவரை தேடவும், அநேகர் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.**

***ரோமர் 10:13. ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.***

இந்த இக்கட்டான சூழ்நிலையில் மனிதர் கர்த்தரை தேடும்படியாகவும், இயேசுவே வழி என்பதை அறிந்து கொள்ளும்படியாகவும் ஜெபிப்போம். அநேகர் இரட்சிக்கப்பட்டு, இந்த உபாதையிலிருந்து தப்பும்படியாகவும், தேவ ராஜ்யத்தின் பங்காளர்களாய் மாறி நித்திய ஜீவனை அடைய ஜெபிப்போம்.
இதற்காக நாம் சுவிசேஷ பாரம் உடையவர்களாக ஜெபிப்போம்.
விசேஷமாக இந்தியா, UAE, USA மக்களுக்காக ஜெபிப்போம்.

***எரேமியா 33:6 - இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.***

**13) இந்த நெருக்கடி நிலைமை மாறி நாம் மறுபடியும் சபையாக ஆராதிக்க தேவன் வாசல்களை திறக்க ஜெபிப்போம்**

கொரோனா நோய் நீங்கி, அந்த நோயினால் வரும் விளைவுகள் பூரணமாக மாறி, ஒரு சபையாக கூடி ஆராதிக்க கர்த்தர் கிருபை செய்ய ஜெபிப்போம்.
அடைபட்டிருக்கும் தம் ஜனத்தை கர்த்தர் நினைத்து வாசல்களை திறக்க ஜெபிப்போம்.

ஆத்தும ஆதாயம் செய்வோம் என்ற பொருத்தனையோடு ஜெபிப்போம். கர்த்தர் நிச்சயமாக சபை கதவுகளை திறப்பார்.

***அப்போஸ் 5:19-20 - 19. கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை வெளியே கொண்டுவந்து:***
***20. நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்.***

**14) இந்திய தேசத்திற்காக ஜெபிப்போம்**

A) இந்தியாவில் தற்போது கொரோனா அதிகமாக பரவி கொண்டிருக்கிறது. இந்த கிருமி முற்றிலும் அழிக்கப்படும்படியாகவும், அதன் பரவுதல் தடை படும்படியாகவும் ஜெபிப்போம். விசேஷமாக மும்பை, சென்னை, டெல்லி பட்டணங்களுக்காக ஜெபிப்போம்.
B) இந்திய தேசத்தின் எல்லைகளில் தொடர்ந்து சமாதானம், பாதுகாப்பு இருக்க ஜெபிப்போம்.
C) வெட்டுக்கிளிகளின் தாக்குதலில் இருந்து மேலும் தேசத்திற்கு சேதம் இல்லாதபடி ஜெபிப்போம்.
D) இந்தியாவிலுள்ள Migrant தொழிலாளிகளுக்கு தொடர்ந்து பராமரிப்பும், வேலைகளும், பாதுகாப்பும் கிடைக்க ஜெபிப்போம்.
E) தேசத்தை பாழாக்கும் மதுபானம் மற்றும் போதை வஸ்த்து அடிமைத்தனம், விபச்சாரம், ஓரின சேர்க்கை, மந்திரவாத கட்டுக்கள், விக்கரக ஆராதனை ஒழிந்து போகும்படியாக ஜெபிப்போம்.
F) பஞ்சத்திலிருந்து தேசம் பாதுகாக்கப்பட்டு, பொருளாதாரம் சீர்பட ஜெபிப்போம். .
G) இயற்கை சீற்றங்களிலிருந்து (நிலநடுக்கம் / நெருப்பு, வெள்ளம், புயல் இவைகளினால் சேதம்) தேசம் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

## **சங்கீதம் 91ஐ முழுவதுமாக சத்தமாக வாசித்து, கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம்.**

**முடிவு ஜெபம்**
என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.
என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.